**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை – 2017**

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பாக கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு சக்தி அதிகார சபை சட்டத்தின் 50(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலக்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 15 திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இவ் அறிக்கையில் அடங்கியுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்று 2018 ஆகஸ்ட் 30 அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைத்திருத்தல்

அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு ஒன்று கீழே காணப்படுகின்றது.

| நிதிக்கூற்று விடயம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா. |
| சொத்துக்கள் | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 1,080,797,130 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 417,284,131 |
| மொத்த சொத்துக்கள் | 1,498,081,261 |

| | |
|---|---|
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 1,372,782,112 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 79,404,647 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 45,894,502 |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 1,498,081,261 |
| மொத்த வருமானம் | 445,107,910 |
| மொத்த செலவுகள் | 439,680,794 |
| மிகை | 5,427,116 |

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் இலங்கை மின்சாரச் சபைக்கு 2012 நவம்பர் ஆண்டின் போது ஆர்ஸீஎல் (Regional Centre for Lighting) நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் சொத்துக்கள் ஒப்படைக்கும் போது நிலுவை வாடகை என பண்டாரநாயக ஞாபகர்த்த சர்வதேச கருத்தரங்கு மண்டப மன்றத்திற்கு செலுத்த வேண்டிக் காணப்பட்ட ரூபா 8,033,270 தொகை செலுத்தியிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 30 திகதி வரை அதனை மின்சார சபையில் இருந்து அறவீடு செய்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் | |
| 46(3) ஆம் பிரிவு | வலு நிதியத்தின் குறிக்கோளுக்கு முரணாக நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு அலுவலகக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக மற்றும் கட்டிடத்திற்கான வரைபு தயாரிப்பதற்காக 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 54,263,517 தொகை அதிகாரசபையினால் அந்த நிதியத்தின் முதலீடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணம் 454 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பண்டப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 757(1) | உரிய படிவத்தை அடிப்படையாக வைத்து சொத்துக்கள் பௌதீக ரீதியில் மெய்மையாய் திருக்கவில்லை. |
| (இ) | திறைசேரி சுற்றறிக்கை | |
| | (i) 1978 இன் நவம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | கூட்டுத்தொகை ரூபா 1,961,896,952 தொகைக்கான நிலையான சொத்துக்களுக்கான சொத்துக்கள் பதிவேடு ஒன்று முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | ரூபா 14,973,433 தொகை பெறுமதியான கணனிகள், துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொது நிருவாக சுற்றறிக்கை | |
| | 2011 திசெம்பர் 12 திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | திறந்தொழில் படியாக இலங்கை பொறியியலாளர் சேவையில் உத்தியோக த்தர்கள் மாத்திரம் உரிமை பெற்றுள்ள போதிலும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கை பொறியியலாளர் சேவையில் அடங்காத அதிகார சபையின் பொறியியலாளர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத் தர்களுக்காக 2016 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 மே மாதம் வரை ரூபா 7,980,000 இற்கான தொகையொன்று திறந்தொழில் படி என அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ‘‘சுவிச் - ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சங்கத்தினல் கிடைத்திருந்த ரூபா 7,334,354 இற்கான தொகையில் ரூபா 3,135,202 தொகை 1994 ஜுன் 04 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது அதிகாரசபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் திறந்தொழில் படி என செலுத்தப்பட்டிருந்தது. சட்டரீதியல்லாத இந்தக் கொடுப்பனவை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அல்லது அதற்குப் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்காக அமைச்சு செயலாளரினால் 2012 திசெம்பர் 03 திகதி வழங்கிய கட்டளையினை 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 01 திகதி ஒரு வருடத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த புதிய பணிப்பாளர் நாயகத்திற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சட்டத்தின் 52(4) ஆம் பிரிவின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 250,000 இற்கான சம்பளம் ஒன்று செலுத்தியிருந்த போதிலும் இது வரை குறிப்பிட்ட பதவிக்காக நிறுவனம் 2/2016 முகாமைத்துவச் சேவைத் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் HM.2-3 தொகுதியின் கீழ் ரூபா 98,215 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் அலுவல்கள் குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் தூரநோக்குடன் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியிருப்பதால் குறைந்தளவு மூன்று வருட காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் திட்டமிட்ட இலக்குகளை நெருங்கக் கூடிய விதமாக நிறுவனத்தை செயற்படுத்துதல் பணிப்பாளர் சபையின் முழுமையாக பொறுப்பு இருந்த போதிலும் 2003 ஜூன் 02 திகதி பீஈடீ/12 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று வருடாந்தம் தயாரித்திருக்கப்படுவதுடன் அதன் முன்னேற்றத்தின் மீளாய்வு செய்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறிக்கை ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(இ) அதிகார சபையினால் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.1.2 செயல் ஆற்றல் மற்றும் மீளாய்வு**

குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வலு கணக்காய்வு மற்றும் வலுச்சேவை வழங்கள்**

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரச சபைச் சட்டத்தின் பிரகாரம் (Energy efficiency improvement, Energy Auditing and Energy Service) அதிகார சபையினால் வலு உபகரணங்கள் வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2008-2012 ஆகிய காலப்பகுதியில் கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அவ் உபகரணங்களை பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் இந்த அளவை உபகரணங்களை பயன்படுத்தி பெறப்படும் தகவல்களின் சரியான தன்மை மற்றும் பண்புசார் தன்மை தொடர்பாக திருப்தி அடைய முடியாதுள்ளது.

(ii) அதே போல் இந்த உபகரணங்களில் 2017 பண்ட கணிப்பீட்டின் மூலம் குறைபாடுகள் உள்ளமை இனங்கண்டிருந்த உபகரணங்களை அகற்றுவதற்கு, பழுதுபார்ப்பதற்கு அல்லது நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) அதிகார சபையினால் வலு அளவை உபகரணங்கள் வாடகைக்கு வழங்கும் போது அறவிடப்படும் கட்டணம் 2010 ஆண்டின் போது பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆண்டு வரை இந்த கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொண்டிருக்கவில்லை.

(iv) வலு சேவைப் பிரிவின் பதவியணியினரில் பொறியியலாளர் ஒருவர் பொறியியல் உதவி உத்தியோகத்தர் மாத்திரம் கடமையில் ஈடுபட்டிருந்தமையால் சேவை வழங்குதல் மற்றும் உபகரணங்களை மீளப்பெறல் ஆகிய அலுவல்கள் ஒழுங்கு முறைப்பிரகாரம் மேற்கொள்வதற்கு இயலாதுள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக சேவைகள் வழங்குவதில் வீழ்ச்சி அடைவதுடன் அளவை உபகரணங்கள் திருப்பி பெறும் போது பரிசோதனை செய்யப்படாமல் ஒப்புக்கொள்ளல் நடைபெறுவதனால் குறைபாடுகளுடன் உபகரணங்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்த்திருந்த 03 சூரிய வலு செயற்திட்டங்கள் மற்றும் சூரிய வலுவை வினைத்திறமையினை முன்னேற்றும் 03 செயற்திட்டங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 74.787 மில்லியனிற்கான ஏற்பாடுகள் நிலைபெறுதகு வலு நிதியத்திலிருந்து பெற்றிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை 4 செயற்திட்டங்களில் எந்த கருமங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 2 செயற்திட்டங்களில் 0.2 சதவீதம் முதல் 1 சதவீதம் வரையான செயலாற்றுகை மாத்திரம் அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்காக தலைமை அலுவலகம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 30 வருட குத்தகை அடிப்படையில் 2015 ஜுன் 22 திகதி ரூபா 45,856,451 தொகை செலவிடப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து காணி ஒன்று பெற்றிருந்தது. சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளாமல் குத்தகை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2 வருடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு இயலாத போது குத்தகை ஆதனத்தின் உரிமை குத்தகையாளருக்கு கிடைக்கும் என நிபந்தனை ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2018 செப்தெம்பர் 30 திகதி அளவில் 2½ வருடங்ளை மிகைத்திருந்த போதிலும் கட்டிடத்தின் வரைபுகள் தயாரிக்கும் விடயம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினால் 2018 மே மாதத்தில் அதிகார சபையின் சேவையில் இருந்து விளகிச் சென்றிருந்த சேவைக் காலம் 05 வருடங்களை மிகைத்துள்ள ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்காக ஓய்வூதிய பணிக்கொடை என ரூபா 160,090 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் ஆரம்பம் முதல் சம்பள மாற்றங்கள் மேற்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை 2012 பெப்ரவரி 03 திகதி அதிகாரசபைக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த விதப்புரைகள் நிறுவனத்தினால் இது வரை செயற்படுத்தியிருக்கவில்லை. இவ் அறிக்கையின் பிரகாரம் 2007 அக்தோபர் 01 திகதி முதல் 2011 செப்தெம்பர் 30 திகதி வரை சுற்றறிக்கைகளுக்கு புறம்பாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,171,760

இற்கான சம்பளங்கள் மற்றும் படிகளை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யும் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அமைச்சின் செயலாளரினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு அல்லது சரிசெய்வதற்கு அதிகார சபையினால் நடடிவக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2007 செப்தெம்பர் 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதங்களுக்குள் மூன்று பிரோடோடயிப் மின்சக்தி மூன்று வாகனங்களை திருத்துவதற்காக 2007 ஆண்டின் போது வெளிசாராருக்கு ரூபா 7,956,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஆகஸ்ட் 30 திகதி வரை 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஒரு வாகனத்தையேனும் திருத்துவதற்காக திருத்தம் செய்யும் நிறுவனத்திற்கு முடியாதிருந்ததுடன், 03 வாகனங்களையும் திருத்துவதற்கு அல்லது செலுத்தியிருந்த பணத்தை திரும்ப பெறுவதற்காக உரிய நடவடிக்கைகள் அதிகார சபையினால் எடுத்திருக்கவில்லை.

**(உ) காற்றுமானி கோபுரங்கள்**

சர்வதேச வழிகாட்டல் (MENSNET Site Assossonent Guig Line 2 April 2016) இன் பிரகாரம் காற்று உற்பத்திநிலைய மாதிரி வடிவமைப்பதற்காக ஒரு ஆண்டில் இடையறாத அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் போதியளதாக இருந்ததுடன் தரவுகளிடையே இணைத்தொடர்பு (Co- Relation) பரிசோதனை செய்வதற்காக 2-3 வருடங்களின் தரவுகளை பெற்றுக்கொள்ளல் போதியதாகும். அதன் பிரகாரம் 2012 ஆண்டிற்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த 06 கோபுரங்களின் மூலம் போதிய தரவுகள் பெற்றிருந்த போதிலும் அந்த தரவுகளை பயன்படுத்தி காற்று வலு வள தேசப்படங்கள் மற்றும் திட்டங்கள் தயாரித்தல் 2018 ஆகஸ்ட் 31 வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஊ) 2008 மார்ச் 21 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை வழமையல்லாத புத்தாக்க மின் வலு அபிவிருத்தி செய்வோருக்கு "cost based tariff" முறையின் கீழ் புதிய கட்டண முறை ஒன்று செயற்படுத்தி இருந்ததுடன் கிரயத்தில் 90 சதவீதம் இலங்கை மின்சார சபை மேற்கொள்வதற்கும் மீதியாகிய 10 சதவீதம் நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் மீளளிப்பு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 897,025,999 இற்கான அத் தொகையினை தீர்ப்பதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்று அதிகாரசபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

(அ) "சுவிச்-ஏசியா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்டு மீதியாக திருப்பி செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,548,176 தொகை மற்றும் சேமிப்பு கணக்கு ஒன்றில் ரூபா 150,000,000 இனை மிகைத்த தொகையொன்று பல வருட காலமாக முதலீட்டு விடயமொன்றுக்கு பயன்படுத்தாமல் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபைக்கு சொந்தமான கப் வண்டி ஒன்று மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று 3 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மேற்கூறிய கப் வண்டியை லங்கா ஒடோ மொபயில் சங்கத்தின் மூலம் 2015 ஜூன் 17 ஆம் திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு 2018 ஆகஸ்ட் 30 திகதி வரையும் உரிய நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கப் வண்டி திறந்த வெளியில் உக்கிய நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவுதல் மேற்கொள்ளும் விதப்புரையின் மீது கழற்றி அகற்றப்பட்டிருந்த ஸாம்பூர் மற்றும் முல்லிபுரம் காற்று மானி கோபுரங்கள் எதுவித உடன்படிக்யையும் இன்றி சேவை வழங்குனருக்கு சொந்தமான கப்பெடிவலானவில் அமைந்துள்ள வளவு ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்த கோபுரங்களில் கழற்றி அகற்றப்பட்டிருந்த உபரணங்களை அதிகார சபைக்கு ஒப்படைத்தற்காக பதிவேடுகள் ஏதும் இன்றி சேவை வழங்குனருக்கு பணம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கழற்றி அகற்றப்பட்ட ஆதனங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு 2018 ஆகஸ்ட் வரை அதிகார சபைக்கு இயலாமல் உள்ளது.

(ஈ) நாடுகுடா காற்றுமானி கோபுரத்திற்காக 2016 பெப்ரவரி மாதத்தில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,775,025 இற்கான பெறுமதியான உபகரணங்களில் ரூபா 915,625 தொகை பெறுமதியான உபகரணங்கள் 2018 ஆகஸ்ட் வரையும் பயன்படுத்தியிருக்காததுடன் ஏனைய உபகரணங்கள் 11 மாத தாமதத்தின் பின்னர் பொருத்தப்பட்டிருந்தது.

## 3.4 பதவியணியின் நிருவாகம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 136 தொகையாக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 103 ஆகும். அதன் பிரகாரம் பதவியணியில் 33 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 3 பணிப்பாளர் பதவிகள், 4 பிரிவுத் தலைவர் பதவிகள் மற்றும் 12 முகாமைத்துவ பதவிகள் காணப்பட்டது.

(இ) மேற்கூறியவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட மூன்று பணிப்பாளர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் 4 இல் 03 பேருக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயம் 13.1(ஆ) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக நிரந்தர பதவியின் நியமன அதிகாரி ஆகிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் தலைவரினால் 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பதில் கடமையாற்றும் பதவிக்காக நியமனங்கள் செய்யப்பட்டிருந்தது. தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.7 பந்தியின் மற்றும் VII ஆம் பந்தியின் 12.2.6 பந்திக்கு முரணாக 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை பதில் கடமை படியாக கூட்டுத்தொகை ரூபா 2,903,361 தொகை செலுத்தியிருந்தது.

(ஈ) பணிப்பாளர் சபைக்குள் அங்கீகாரம் இன்றி அதிகார சபையின் 06 பதில் கடமை பதவிகளுக்காக 2008 ஜுலை 28 திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆம் திகதிய பீஈடீ/01/2015 ஆம் இலக்கம் ஆகிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2013 ஆண்டு முதல் 2016 வரை எரிபொருள் படியாக ரூபா 2,610,880 தொகையும், 03 பிரிவுத் தலைவர் பதவிகளில் பணிப்பாளர் ஒருவருக்காக போக்குவரத்து படியாக 2015 முதல் 2017 ஆண்டு வரை ரூபா 4,210,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) காற்றுமானி கோபுரங்களின் பராமரித்தல், கோபுரங்களின் மூலம் தரவுகள் சேகரித்தல், மென்பொருளின் மூலம் தரவுகள் தயாரித்தல் மற்றும் கோவைகள் பேணல் ஆகிய அனைத்து கருமங்களும் 2017 ஆரம்பம் முதல் ஒரு தொழில்நுட்பவியல் உத்தியோகத்தருக்கு வரையறுக்கப்பட்டிருந்தமையினால் 2017 ஆண்டிற்கான திட்டமிடப்பட்டிருந்த செயலாற்றுகை இலக்கினை நெருங்குவதற்கு இயலாதிருந்ததுடன் அது எதிர்கால செயலாற்றுகைக்கும் பிரதிகூலமான முறையில் தாக்கக்கூடிய ஆபத்து ஒன்று காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குதல்

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய தூயவலு வழங்குவது தொடர்பாக “2030” நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இலக்குகளை இனங்காணல் மற்றும் அந்த இலக்குகைள நிறைவேற்றிக் கொள்ளல் இடையே முரண்கள் மற்றும் முன்னேற்றத்தை அளவீடு செய்யும் பொருத்தமான தேர்வுமுறை செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இனங்கண்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செய்முறை

#### 5.1.1 பெறுகைகள்

அதிகார சபையினால் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டிற்கான பெறுகைகளுக்காக ரூபா 341.409 மில்லியன் தொகை பெறுகை திட்டத்தின் மூலம் மதிப்பீடு செய்திருந்த போதிலும் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட பெறுகைகளில் ரூபா 94.476 மில்லியன் இற்கான பெறுகைகள் நடவடிக்கை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபை, பெறுகைத் திட்டத்தை தயாரிக்கும் போது நிறுவனத்தின் தேவையினை மிகைத்து மதிப்பீடு தயாரித்திருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெறுகை திட்டத்தில் நேர அட்டவணை ஒன்று இனங்கண்டிருந்த போதிலும் அக்காலப்பகுதியில் முறைப்பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 50 வழங்கல்கள் மேற்கொள்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 06 வழங்கள்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | பல்வேறு செலவுத் தலைப்புகளின் கீழ் மேற் கொள்ளப்பட்ட செலவுகள் பகுப்பாய்வு செய்யக் கூடிய விதமாக கணினி மயப்படுத்திய பேரேடு அறிமுகப்படுத்தியிருக்காமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | (i) விளைவற்ற நிதி மீதிகள் காணப்படல்.<br><br>(ii) சம்பள பதிவேடு தயாரித்தல், பரிசோதனை செய்தல் மற்றும் சம்பள காசோலை கையொப்பமிடல் தொடர்பாக சிறந்த வேலை பகிர்வு செய்திருக்காமை.<br><br>(iii) காசோலைகளுக்காக கையொப்பமிடும் உத்தியோகத்தர்களைப் பெயரிடும் போது நிதி வரை ஏதும் விதிக்காமல் காசோலைகளுக்கு கையொப்பமிடும் அதிகாரம் சாட்டப்பட்டிருத்தல்.<br><br>(iv) கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் பரிசோதனை செய்தல், காசோலைகள் கையொப்பமிடல், சம்பள பதிவேடுகள் தயாரித்தல், வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் ஆகிய கருமங்கள் வெவ்வேறு ஆட்களுக்கும் சாட்டப்பட்டிருக்கவில்லை.<br><br>(v) நாட்குறிப்பு உறுதிச் சான்றுகளை பரிசோதனை செய்யப்பட்டதென மற்றும் அங்கீகரிக்கப்பட்டதென கையொப்ப மிட்டிருக்காமை, நாட்குறிப்புக்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நாட்குறிப்பு உறுதிச் சீட்டுடன் இணைத்திருக்கவில்லை. |
| (இ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய தொகைகளைத் தாமதமின்றி சேகரித்துக் கொள்ளாமை. |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | அதிகார சபையின் குறிக்கோள் நிறைவேற்றிக் கொள்வதற்கான கடமைகள் மற்றும் அளவுகளின் பிரகாரம் மனித வளம் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்திருக்காமை. |
| (உ) | செயற்திட்டங்களை அமுல் நடத்துதல் | செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்திட்ட விடயங்களை திட்டமிட்டவாறு செயற்திறனுடனும் தாமதமின்றியும் செயற்படுத்தாமை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்தல், பதிதல், முறைப்பிரகாரம் நடைபெறாமை மற்றும் அவை அதிகார சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனுடன் பயன்படுத்தியிருக்காமை.<br><br>(ii) பொருட் பதிவேடு பேணப்படாமை.<br><br>(iii) பிரிவுகளிடையே நிலையான சொத்துக்கள் பெறுகை பதிவேடு மற்றும் வழங்கும் பதிவேடு பேணப்படாமை. |
| (எ) | தகவல் முறைமை முகாமைத்துவம் | தரவுகள் மற்றும் தகவல்கள் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படாமை. |
| (ஏ) | வாகனக் கட்டுப்பாடு | 2014 ஆண்டின் பின்னர் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை செய்திருக்கவில்லை. |